**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள் : 31.07.2026**

**வழக்கு எண் : HMOP.25/2023**

**சாட்சி பெயர் : திருமதி.மதுபாலா / RW.1**

**குறுக்கு விசாரணை**

நான் நீண்டநெடுநாட்கலாக, பல ஆண்டுகளாக மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல, நான் பிரியவில்லை, அவர்தான் பிரிந்துவிட்டார். நான் சேர்ந்துவாழ இதுவரை சேர்ந்து எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேர்ந்து வாழ முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பமில்லாததால்தான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமண ஒரிரு மாதங்களில் மனுதாரரை விட்டு பிரிந்துவிட்டேன் என்றால் சரியல்ல, அவர்தான் பிரிந்துவிட்டார். அந்த ஒரிரு மாதங்களளை தவிர நான் மனுதாரருடன் சேர்ந்துவாழவில்லை என்றால் சரியல்ல. எங்கள் சமூகத்தில் கணவர், மனைவி வீட்டில் வாழ வேண்டும் என்றால் சரிதான். எங்களுக்கு சிவகளை கிராமத்தில் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் எங்கள் வீட்டில் எங்களுடன் சேர்ந்துவாழ்ந்தது இல்லை என்றால் சரிதான். எங்களது சொந்த வீடு இருந்தும் என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்பதற்கு காரணம் உண்டா என்றால் நாங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்பதுதான் காரணம். எங்களது திருமணம் திருமண மண்டபத்தில் மனுதாரரின் சொந்தசெலவில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமண செலவுகளை மனுதாரர் வீட்டில் செய்தார்கள் என்றால் சரிதான். எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள எங்களுக்கு மொய் பணம் ரூ.32,000/- வந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மொத்த திருமணம் செலவும் மனுதாரர் வீட்டில் செய்ததால் எங்களுக்கு மொய்பணம் வரவில்லை என்றால் தவறு. மனுதாரர் அண்ணன் மதுரையில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரருடைய அண்ணன் பிள்ளைகள் பாளையங்கோட்டையில் படித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

மனுதாரருடைய அண்ணன் பாளையங்கோட்டையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரருடைய அண்ணன் குடும்பத்துடன் நாங்கள் ஒருபோதும் கூட்டுகுடும்பமாக வசிக்கவில்லை என்றால் அது பொய். முதல்விசாரணையில் நாங்கள் கூட்டுகுடும்பமாக வாழ்ந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் அண்ணன் பிள்ளைகள் பாளையங்கோட்டையில் படித்ததாலும், நான் சொன்னமாதிரி கூட்டுகுடும்பமாக வாழ்ந்திருப்பது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கை வலுபடுத்த வேண்டும் என்பதற்காக கூட்டுகுடும்பமாக வசித்து வந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தபால்காரர் வேலை பார்த்து விருப்பஓய்வு பெற்றுள்ளார். எனது தகப்பனார் விருப்ப ஓய்வு பெற்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவரை பதிவியிலுந்து நீக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அவரது குணாதிசயங்களை பார்த்துதான் நீக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. என்னுடன் சேர்த்து கணவருடன் வாழாமல் நான்குபேர் பிரிந்துவாழ்கிறோம் என்றால் சரியல்ல, இரண்டு பேர்தான். தவறான வழிகாட்டுதலின் என் கணவருடன் வாழாமல் பிரிந்து வாழ்ந்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் பேச்சை கேட்டு எனது கணவருடன் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவும், நானும் மனுதாரரை கல்லால் அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல, மனுதாரர்தான் எனது அப்பாவை கல்லால் அடித்து காயப்படுத்தினார். நானும், எனது அப்பாவும் மனுதாரரை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. நானும், எனது அப்பாவும் மனுதார் மீது ஏரல் காவல்நிலையத்தில் பல்வேறு பொய் புகார் மனுக்களை கொடுத்தோம் என்றால் சரியல்ல. மனுதாரர் குடும்ப பெரியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபொழுது அவர்களை திருப்பி அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. மனுதாரரை மிரட்டி வந்தோம் என்றால் சரியல்ல. மனுதார் மற்றும் அவரது குடும்பத்தார் மீது ஏரல் காவல்நிலையத்தில் பொய்யான வழக்குகள் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நானும், எனது அப்பாவும் மனுதாரரை பல்வேறு காலகட்டங்களில் மிரட்டி வந்தோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு காது

சரியாக கேட்காது என்றால் சரிதான். அவர் காது கேட்காத காரணத்தினால் எவ்வித வேலைக்கும் சரிவர செல்லமுடியாது என்றால் சரிதான். நான் அவருடன் இருந்த காலத்தில் அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் கொரானா காலகட்டம் என்பதால் அவர் தூத்துக்குடி ஸ்பிக்கில் வேலை பார்த்தார், கொரானா காலகட்டம் என்பதால் அவருக்கு விடுப்பு கொடுத்திருந்தார்கள். நாங்கள் சேர்ந்து வாழ்ந்து அவர் எவ்வித வருமானம் ஈட்டி தரவில்லை என்றால் சரிதான். நான் வேலைக்கு செல்லவில்லை. நான் சூர்யா எக்ஸ்போர்ட் நிறுவனத்தில் முன்பு வேலை பார்த்தேன். மனுதாரர்க்கு அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அவரால் எந்தவித வேலையும் செய்யமுடியாது என்றால் சரிதான். அவர் தனியார் மருத்துவமனையில் சொற்ப சம்பளத்தில் செக்யூரிட்டி வேலை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. அவருக்கு வேறு எந்த வருமானம் இல்லை என்றால் சரியல்ல, வசதி நிறைய உள்ளது. அவருக்கு வசதி நிறைய உள்ளது என சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் மாதாமாதம் என் அப்பாவுக்கு பணம் கொடுக்க சொல்லி வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. எனது பண்டபாத்திர சீர்வரிசை பொருட்களை எங்கள் வீட்டில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு 3 பவுன் நகை போட்டார்கள், கம்மல், செயின்,மோதிரம் போட்டார்கள். செயின் எத்தனை பவுன் என்று தெரியாது, என் அப்பாவிற்குதான் தெரியும். அவ்வாறு உண்மையில் போட்டிருந்தால் அது எத்தனை கிராம் என்று தெரியும் என்றால் சரியல்ல. நான் போட்டிருந்த கம்மலையும், மோதிரத்தையும் நானே எடுத்து கொண்டேன் என்றால் சரியல்ல.எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு 01.05.2021 அன்று எனது உயிர் போகும் அளவிற்கு மனுதாரர் தாக்கியுள்ளதாக சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக எந்த மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தீர்கள் என்றால் சிவகளை மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றேன். உயிர்போகும் அளவிற்கு தாக்கியிருந்தால்வெளிநோயாளியாக சிகிச்சை எடுக்க முடியாது

என்றால் சரியல்ல. நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்துமே பொய் என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு பொய்யாத்தாம்மாள் கோவிலில் வைத்து ஒளிமுத்து என பெயர் சூட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணை சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரணாக சங்கதிகளை சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று மனு கொடுத்தன்பேரில் காவல்நிலையத்தில் அவர் பொய்யாக வரதட்சணை புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான்தான் திருமண ஆன நாள் முதல் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் பொய்யான புகார் கொடுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் விவாகரத்து பரிகாரம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**